பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமான ✱ சேட்டிங் ✱ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஞூ வைகாசி மீ 15 உ ஞாயிற்றுக்கிழமை 22 ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை (28 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-146

# அரசின் யோசனை இன்று புலிகளிடம்

## வன்னிக்கு வந்து திரும்பிய பின் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள்

யாழ்ப்பாணம், மே 28

தமிழ்ப் பகுதிகளில் சமாதானத்தையும், பாதுகாப்பையும் ஏற்படுத்துவதற்கான தனது யோசனைகளை அரசாங்கம் இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

அந்த யோசனைகள் தெரிவிக்கப்பட்டதும், தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள், வன்னிக்குத் திரும்புவார்கள். அதன் பின்னர் மிக நீண்ட இடைவெளியின் பிறகே அவர்கள் இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்காக கொழும்பு வருவார்கள் என்று அறியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஆரம்பப் பேச்சு வார்த்தைகள் இம்மாதம் ஐந்தாம் திகதி ஆரம்பமாகின.

ஆரம்பப் பேச்சுப் பின்னர் அமைச்சர்கள் மட்டப் பேச்சாக விஸ்தரிக்கப்பட்டது.

அந்தப் பேச்சுக்களின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழ் மக்களின் இன்றைய நிலையும், கஷ்டங்களும் எடுத்துக் கூறப்பட்டன.

தமிழ்ப் பகுதிகளில் சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

அது சம்பந்தமான தனது யோசனைகளை அரசாங்கம் அனேகமாக இன்று, தப்பினால் நாளை புலிகள்பிரதிநிதிகளிடம் தெரிவிக்கும் என அறியப்படுகிறது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் திரு. யோகி, திரு. மூர்த்தி ஆகியோர் அரசின் யோசனையுடன் வன்னிக்குச் செல்வார்கள் என்றும், தலைமைப் பீடத்துடன் அது குறித்துக் கலந்தாலோசிப்பார்கள் என்றும் அறிய வருகிறது. மிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு மணித்தியால தாமதத்துடன்

# கொழும்பு ரயில் இரவிலேயே வந்தது!

## இன்று காலை 9 மணிக்குப் புறப்படும்

யாழ்ப்பாணம் மே 28

யாழ். — கொழும்பு பயணிகள் ரயில் நேற்றிரவு 8-30 மணியளவிலேயே யாழ்நகரை வந்தடைந்தது.

நேற்றுக்காலை 5-45 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படவேண்டிய ரயில் நண்பகல் 12-00 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டதையடுத்தே இந்தத் தாமதம் ஏற்பட்டது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாவலர்கள் (கார்ட்டுகள்) சிலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனாலேயே ரயில் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டதாம்.

இரவு இங்கு வந்த ரயிலில் குறைந்த எண்ணிக்கையான பயணிகளே வந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் டாக்ஸிகள், ஆட்டோக்களில் வீடு திரும்பினர்.

வீடு செல்ல முடியாத நிலையில் இருந்தவர்களை ரயில்வே பகுதியினர் அங்கேயே தங்கிச் செல்வதற்கான வசதிகளைச் செய்திருந்தனர்.

ரயில் இன்று காலை ஒன்பது மணிக்கு யாழ்நகரிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும். (ஒ-9)

## கனேடிய தூதர் கொழும்பு திரும்பினர்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்நகர் வருகை தந்த கனேடியத் தூதுவர் நேற்று வடமராட்சி மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பினர்.

கடந்த மூன்று நாட்களாக யாழ்ப்பாணத்தில் தங்கி, பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட கனேடியத் தூதுவர் மக்கள் குறைகளையும் கேட்டறிந்தார். (ஒ-3)

## வேட்டுக்களால் பதற்றம்

காங்கேசன்துறை. மே 28

மாவிட்டபுரம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

திடீரெனக் கேட்ட இச் சத்தங்களால் மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

வேட்டுச் சத்தத்திற்கான காரணம் என்ன என்பது தெரியவரவில்லை. (ஒ-68)

## இமையாணனில் பழைமையான செப்பு நாணயங்கள் கண்டுபிடிப்பு

வடமராட்சி, மே 28

உடுப்பிட்டி, இமையாணனில் பண்டைக்காலத்து செப்பு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இமையாணனில் நிர்மாண வேலை ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது.

சிலர் நிலத்தை ஆழமாகத் தோண்டினர். என்ன ஆச்சரியம்! ஆழத்தில் ஒரு மண்கலசம்.

அந்தக் கலசத்தை பவுத்திரமாக அவர்கள் வெளியே எடுத்தனர். அதனுள் செப்பு நாணயங்கள். அதுவும் ஒன்று, இரண்டா? முன்னூறு நாணயங்கள்.

இந்த நாணயங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை கடைசியாக அரசாட்சி செய்த சங்கிலிய மன்னனின் காலத்தில் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் என ஓர் ஊகம் தெரிவிக்கப்பட்டது.

இமையாணன் என்ற இடம் சங்கிலிய மன்னனால் அவனது பிரதம படைத் தளபதியான இமையாணன் என்பவனுக்கு சன்மானமாக வழங்கப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. (ஒ-160)

## மடுமாதா உற்சவத்துக்கு ஏற்பாடுகள் நடக்கின்றன

வவுனியா. மே 28

மடுத் திருப்பதியில் நிலைமை வழமைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதை அடுத்து வழமை போல் ஜூலை 2ஆம் திகதியும் ஆகஸ்ட் 15ம் திகதியும் திருவிழாக்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ் விழாக்களின் நவநாட்கள் முறையே ஜூன் 23ஆம் திகதியும் ஆகஸ்ட் 6ஆம் திகதியும் ஆரம்பமாகும் என்று மடுமாதா ஆலய பங்குக் குரவர் அருட் திரு. பி. ஜேசுராஜா அடிகளார் அறிவித்துள்ளார்.

மடுமாதாவைத்தரிசிக்க வருகின்ற பக்தர்களின் வருகையும் தினமும் அதிகரித்து வருகின்றது.

மடுமாதா ஆலயத்திலும் அதன் எல்லையிலும் பல திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஒ-164)

### சுபநேரம்

வைகாசி — 15
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
08. 52 முதல் 10. 22 வரை
ராகுகாலம்:
04.22 முதல் 05.52 வரை
அட்டமி மாலை 5-51 வரை
அக்கினி நாள் முடிவு

### முச்சந்தி முரளி



இப்பவே ஆள் சேர்க்கும் படலத்திலை நிக்கிறுரோ மந்திரியார்.......!

## புதுடில்லியில் நேரு நினைவு தினம்

புதுடில்லி, மே 28

நேற்று ஜவஹர்லால்நேரு நினைவு தினத்தை ஒட்டி புதுடில்லியில் விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

நேருவின் சமாதிக்கு இந்திய பிரதமர், ஜனுதிபதி, துணை ஜனுதிபதி ஆகியோர் மலர் வளையம் சார்த்தி அஞ்சலி செலுத்தினர்.

நேருவின் இல்லமான தீன் மூர்த்தி பவனிலும் கர்நாடக மற்றும் ஹிந்துஸ்தான் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (ஒ-9)

# ஒழுக்கம் நிறைந்த சமூகம் ஒன்றை உருவாக்கப் பாடுபடுங்கள்

## மக்கள் தொண்டர்படை அணிவகுப்பு வைபவத்தில் முதலமைச்சர் உரை

யாழ்ப்பாணம், மே 28

நாகரிகமான, ஒழுக்கமான — குடியியல் சமுதாயம் ஒன்றை உருவாக்குவது உங்கள் கடமை. அதற்காக நீங்கள் பாடுபட்டுப் பணி புரிய வேண்டும்.

வடக்கு — கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற குடிமக்கள் தொண்டர் படை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்பு முதலமைச்சர் உரையாற்றினுர்.

சுமார் 250 குடிமக்கள் தொண்டர் படையினர் பயிற்சி முடிந்து வெளியேறுவது தொடர்பாக இந்த வைபவம் நடத்தப்பட்டது — பல நூற்றுக்கணக்கானோர் இந்த வைபவத்தில் பங்குபற்றினர்.

முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள், குடிமக்கள் தொண்டர் படைக்கு அறிவுறுத்தல் வழங்கும் விதத்தில் மேலும் கூறியதாவது:-

தமிழ்பேசும் மக்களுக்குத் தனியான பாதுகாப்புப் படை இல்லை என்ற வரலாற்றை குடிமக்கள் தொண்டர் படையினர் மாற்றி அமைத்துள்ளனர். இப்படியான ஒரு நிலைமையைத் தோற்றுவிக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு இணைப்பு

# சர்வசன வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படும்

## ஜனுதிபதி அறிவிப்பார்

கொழும்பு, மே 28

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புச் சம்பந்தமான உத்தேச சர்வசன வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டது போல, எதிர்வரும் ஜூலை ஐந்தாம் திகதி நடைபெறமாட்டாது.

அதனை ஒத்திவைக்க ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாச முடிவு செய்திருப்பதாக அறிய வந்துள்ளது.

சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைக்கும் அறிவிப்பை திரு. பிரேமதாச விரைவில் வர்த்தமானி மூலம் வெளியிடுவார் என்றும் நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைக்கும் அறிவிப்பை, ஜனுதிபதி பிரேமதாச அடுத்த மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவார் என்று அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

தேர்தல் திணைக்களம் சர்வசன வாக்கெடுப்புச் சம்பந்தமான அலுவல்களைத் தொடங்கு முன்னர் இந்த அறிவிப்பு வந்துவிடும் என்பதாகும். (அ-1)

## இணைப்பை எதிர்க்க சகல கட்சிகளையும் சேருமாறு

### மந்திரி ரஞ்சன் வேண்டுகோள்

கொழும்பு, மே 28

வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைப்பதைத் தடுப்பதற்குச் சகல அரசியல் கட்சிகளையும் ஒருங்கு சேர்ந்து பாடுபடுமாறு வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் சர்வசன வாக்கெடுப்பு ஜூலை 5 ஆம் திகதி நடைபெறலாம் அல்லது நடக்காமலும் விடலாம் என அவர் கூறினுர்:

''மக்களில் ஒரு பகுதியினர் சர்வஜன வாக்கெடுப்பைப் பின்போடும்படி வேண்டுகின்றனர். இவர்களின் விருப்பத்தை ஜனுதிபதி கருத்தில் கொள்வாரா —

இணைப்புக் குறித்து கிழக்கு மாகாணத்தில் வருகிற ஜூலை ஐந்தில் நடத்த நிச்சயிக்கப்பட்டு உள்ள சர்வஜனவாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படலாம் — என்றும் அமைச்சர் கூறினுர். (ஒ-எ-ச)

## 2000 ஆடுகள் வேள்வியில் பலி

யாழ்ப்பாணம், மே 28

கருகம்பனை கவுணவத்தை வைரவர் கோவில் வேள்வி உற்சவம் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது.

அதிகாலையில் இருந்து ஆட்டுக் கடாக்கள் வேள்விக்காக வெட்டப்பட்டன.

நேர்த்திக் கடனுக்காக 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஆட்டுக் கடாக்கள் வெட்டப்பட்டன. (ஒ-113)

## தடைப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்!

யாழ்ப்பாணம், மே 28

யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி (கனகரத்தினம் மகா வித்தியாலய) விளையாட்டுப்போட்டிகள் நேற்று இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் வித்தியாலய மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சில வீதிகளில் போக்குவரத்து தடையானது!

யாழ்ப்பாணம், மே 28

நேற்றுக் காலையில் காங்கேசன்துறை வீதியிலும், பருத்தித்துறை வீதியிலும் சில பகுதிகளில் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தப் பட்டது. காங்கேசன்துறை வீதியில் மனோகராச் சந்திக்கும் - கொக்குவிலுக்கும் இடைப்பட்ட பகுதியும் பருத்தித்துறை வீதியில் கட்டப்பிராய்க்கும், இருபாலைக்கும் இடைப்பட்ட பகுதி ஆகியன போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டன.

இதனை அடுத்து இந்தப் பகுதிக்கான போக்குவரத்துக்கள் மாற்றுப்பாதையூடாக மேற்கொள்ளப்பட்டன.

பிற்பகலில் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ஒ-9)

## ● சட்டமூலம் நிறைவேறியது

மாகாண சபைகள் (பின் விளைவுகள்) சட்டமூலம்நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது,

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எதிர்த்து வாக்களித்தது.

சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம் எதிர்க்கட்சியினர் குறுக்கீடுகளைச் செய்தனர்.

சபைக்குத் தலைமைவகித்த உப சபாநாயகர் திரு. காமினி பொன்சேகாஎதிர்க்கட்சியினர் குழப்பம் விளைவிப்பதாகக் குற்றம் சாட்டினுர்.

சபையில் சிறிது நேரம் அமைதியின்மை நிலவியது, (ஒ-ச)

## பர்மா மியான்மா ஆனது

ரங்கூன், மே 28

பர்மாவின் பெயர் மியான்மா என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று பர்மா அரசு இந்தப் பெயர் மாற்றத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

'யூனியன் ஒவ் பர்மா' என்ற பெயர் இனி 'யூனியன் ஒவ் மியான்மா' என்றழைக்கப்படும்.

தலைநகர் ரங்கூன் இனி யங்கூன் (Yangoon) என்றழைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பேச்சாளர் திரு கேஸோசான் பெயர் மாற்றம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் புதிய பெயர் மியான்மா நாட்டில் உள்ள சகல இனங்களுக்கும் (கரேன், கச்சின், ஷான், ஷின்) பொதுவானது என்று தெரிவித்தார். (ஒ-எ(

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Double Door 'Philco' குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. 376, நாவலர் வீதி, ராசாவின் தோட்ட சந்தி, யாழ்ப்பாணம். [592]

எல்லா வகையான உள்நாட்டு, வெளிநாட்டு லெட்டபாட் வகைகளும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மலிவு விலை 8/50 இல் இருந்து எல்லா விலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம், பூபாலசிங்கம், புத்தகசாலை (பஸ்நிலையம்), யாழ்ப்பாணம். [சி/2515]

புதிய Audio Deck (Kenwood) விற்பனைக்கு உண்டு. 4 Pices 2 Speakers) இ. சிறிகாமோகரராஜா மணிவ கினி V. C ஒழுங்கை சொல்லன்டலட்டி. செல்விப் பனை மாலை 2.00 மணியிலிருந்து 6.00 மணிவரை பார்வையிடலாம். (587)

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [571]

இரண்டு மாதம் நிறைந்த பூச்சி அகற்றப்பட்ட வெள்ளை பொமனேறியன் ஆண்/பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 12, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (579)

மிகவும் நல்ல நிலையில் உள்ள M. B. 5. மோட்டார் சைக்கிள் கறுப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு; சி. நாதன் No 16/3 ஈச்சமோட்டை விதானையார் வீதி, யாழ்ப்பாணம். (586)

### இறைச்சிக் கோழி

Broiler பேட்டுக்கோழி, சேவல், சூப் குஞ்சு, விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பரப் பலகை உண்டு. Nallur Farm Centre, 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/2519)

### FOR SALE

National T. V 20" Colour Sony 2 60 N E C. 17" B/W J.V.C. Deck 4R 3330 Technick Box. S T L Video Club No 3. Model Market Thirunelvely. (583)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தூய இன Hyline (கறுப்பு, வெள்ளை, பிறவுண்) Golden comet (பிறவுண்) பேட்டுக் குஞ்சுகள் புறயிலர் Christhombu hybro) அத்துடன் பிலிமத் சேவல்கள் மாதம் இருமுறை விநியோகிக்கப்படும். பதிவு செய்யவும். கால்நடை வளர்ப்போர் சங்கம்-சுன்னாகம், கிளை (பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்) அலுவலகம், K.K.S. வீதி, சுன்னாகம். (11042)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2518]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் 30. 05. 89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [570]

### வாடகைக்கு

வட்டுக்கோட்டையில் V. C. க்குப் பின்புறம் எல்லா வசதிகளுமுள்ள இரண்டு படுக்கை அறை வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு நேரில்:- ஜோன், ஞானசம்பந்தர் ஒழுங்கை. (594

சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ் மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்காக உள்ளது தொடர்பு: Ratna Motors 55, Stanley Road, Jaffna [591]

### ஒப்படைக்கவும்

கோட்டைக்காடு மல்லாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த கமலேஸ்வரன் நகுலேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டையை சுன்னாகத்தில் கவற விட்டு விட்டேன் கண்டெடுத்தவர் தயவு செய்து கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கமலேஸ்வரன் நகுலேஸ்வரி, கோட்டைக்காடு, மல்லாகம். (593)

### தேவை

வெயிட்டர் வேலைக்கு நன்கு அனுபவம் வாய்ந்தவரும் குசினிவேலையில் அனுபவமிக்கவரும் தேவை. தொடர்பு றிக்கோ ஹோட்டல் 370 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [584]

### பெண் நெசவாளர் தேவை

மின்தறி நெசவாலைக்கு அனுபவமிக்க பெண் நெசவாளர், வாப்பர் உடன் தேவை. நேரில் வரவும்: ஸ்ரீ ராஜ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ், வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி. (வட்டு இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்) (581)

### உங்கள் தேவைக்கு

காணி, வீடு, கடை விற்பதற்கு வாங்குவதற்கு வீடு கடை வாடகைக்கு கொடுப்பதற்கு வாங்குவதற்கு தொடர்பு கொள்ளவும். S. குபேரன் No-469 நாவலர் றோட், ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (11058)

### சேவை

வெளிநாடு செல்வதற்கு உடன் பாஸ்போட் தேவையானோர் தொடர்பு கொள்க மங்கள ஏஜன்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (11072)

தட்டச்சு றேணியோ வேலைகள் மிகத் தெளிவாகவும் குறித்த நேரத்திலும் செய்து கொடுக்கப்படும். Teens-Copy, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/2317)

### வகுப்புகள்

Typing Short Hand வகுப்புக்கள். வாரநாட்களிலும் வார இறுதி நாட்களிலும் வெவ்வேறாக நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும். Bond Institutes, 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/2316)

### SriRam

பாவித்த T. V. Fridge oven motor, Rice cooker, Cycle, Fish Tank செற்றி செற், கட்டில் மற்றும் புதிய தளபாடங்கள் மலிவுவிலையில். SriRam 3 ஆம் கட்டை பருத்தித்துறை வீதி. (11057)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17 மின்சார நிலையவீதி. 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

---


விவசாயிகளே!

- களைகள் முளைக்குமுன் அழிக்க வல்ல
- பரந்த செயற்பாடுடைய ஒரே களை நாசினி

## லஸ்சோ

[அலக்குளோர் Alachlor]

நாற்று நடப்பட்ட மிளகாய்க்கன்றுகள், வெங்காயம், நிலக்கடலை, சோயா அவரை, பாசிப்பயறு, கௌபீ ஆகிய பயிர்களுக்கு

விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது

**லங்கெம் விவசாயிகளின் தோழன்**

சில்லறை விலைகள்: 400 மி.லீ - ரூபா 135.00
200 மி.லீ - ரூபா 75.00

வட மாகாண விநியோகஸ்தர்கள்:

(1) V. வடிவேலு
219, 221, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(2) புஸ்பா அன் கோ
128 B, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(3) வீ. கே. வீ'ஸ் ஸ்டோர்ஸ்
353, கண்டி வீதி,
கிளிநொச்சி.

(4) பிள்ளையார் ஸ்டோர்ஸ்
மல்லாவி,
யோகபுரம்.

[சி-2645]


---

## 41-ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

உதயம்:
18-04-1954

அஸ்தமனம்
18-04:1989



**சின்னத்துரை குணபாலசிங்கம்**
**(பிச்சி)**
(கவிதா டிரான்ஸ்போட் சேவீஸ் உரிமையாளர்)

பிறந்த நாளில் இறப்பது அபூர்வம்! இடையினில் வாழ்க்கையை முடித்தது கொடூரம். உங்கள் ஆவி பிரியும் வேளையில் அருகினில் யாருமில்லையே! காலமெல்லாம் எமக்குக் கலக்கம் தானு?


உங்கள் ஆத்மா சாந்திபெற எமது கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்கி இறைவனுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம். இன்று 28.05.89 ஞாயிறு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அன்னாரின் அன்புக்குரியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

மடத்தடி,
அச்சுவேலி வடக்கு. (697)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திரு. சங்கரப்பிள்ளை கிருஷ்ணராஜா**

அன்னை மடியில்: 07 - 02 - 1941 ஆண்டவன் அடியில்: 07 - 06 - 1988

திதி: 28. 5. 1989

வாடாமலரே அப்பா! நீங்கள் எம்மை
இங்கு வாடவிட்டுச் சென்றதேனப்பா?
நிலையான கல்வி, செல்வம் தர விழைந்தாயப்பா!
நிலை தடுமாறிச் சென்றதேனப்பா?
தாயிழந்த கன்றுபோல் ஆனோமப்பா!
தரணியில் பரிமாறும் வார்த்தையும் இனிஇல்லையப்பா!
இரும்பாக்கி எம்மனதை இருக்க நினைத்தாலும்
கரும்பான உம் நினைவுகள் எம்மை வாட்டுகின்றதே!
எப்போதும் அருகிருந்து அரவணைத்த தெய்வமே!
எங்களப்பா எங்கே? எங்கே? என்று ஏங்கி அழுகின்றோம்
முப்போதும் துதி செய்வோம்
உன்னை நினைத்தென்றும்!
முழு நிலவாய் எம்மை வாழ்த்த வருவாயப்பா!

எம்மைத் திடீரென விட்டுப் பிரிந்த எமது ஆருயிர் குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல வீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள். [11073]

---

## Immediate Vacancies IN HONG KONG

## ஹொங்கொங் நாட்டுக்கு உடனடி வேலைவாய்ப்புகள்

| | கொங் கொங் $ டொலர் | இலங்கை ரூபா. |
|---|---|---|
| 1. தச்சுத் தொழிலாளர் | 6300 | 25,200.00 |
| 2. மேசன் | 6240 | 24,960.00 |
| 3. மேசன் (மாபிள், டெறசோ-பதிப்பவர்கள்) | 7200 | 28,800.00 |
| 4. லேபறர் (கட்டடப்பகுதி) | 4200 | 16,800.00 |
| 5. கொங்கிறீற் லேபறர் | 6300 | 25,200.00 |
| 6. வாய்க்கால் அமைப்பவர் (Drainlayer) | 6150 | 24,600.00 |
| 7. கருங்கல் பதிப்பவர் | 6240 | 24,960.00 |
| 8. கம்பி வளைப்பவர் (Steel Bender) | 9000 | 36,000.00 |
| 9. தச்சுத் தொழிலாளர் (Joiner) | 6300 | 25,200.00 |
| 10. பிளம்பர் (Plumber) | 4200 | 16,800.00 |
| 11. பூச்சுப் பூசுபவர் (Plasterer Labourer) | 5340 | 21,360.00 |
| 12. பெயின்ரர் (Painter) | 5730 | 22,920.00 |
| 13. எலக்றிசியன் (Electrician) | 5250 | 21,000.00 |
| 14. பிளான்ட் ஒப்பறேற்றர் (Plant Operator) | 5190 | 20,160.00 |
| 15. கனரக சாரதி (Truck Driver) | 4800 | 19,200.00 |
| 16. மெக்கானிக் | 7290 | 29,160.00 |
| 17. துளை போடுபவர்கள் (PneummicDriller) | 621[illegible] | 24,840.00 |
| 18. வீட்டுப் பணிப்பெண்கள் | 2500 | 10,000.00 |

✶ ஒரு ஹொங்கொங் டாலர் - ரூ. 4/30

கவர்ச்சிகரமான சம்பளம்:

மருத்துவம், தங்குமிடம் இலவசம்.
15 பாஸ் போட்சைஸ் போட்டோ,
அனுபவச்சான்றிதழ்கள் சகிதம் நேரில் வரவும்.

முகவரி;

**மியூனிஸ் என்ரபிறைசஸ் (Munist Enterprises)**
156, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
(11078)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. கனகரட்னம் முருகரட்னம்**
(சமாதான நீதிவான்)

தோற்றம்: 22 - 11 - 1923 மறைவு: 14 - 04 - 1989

பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர்
காலமெல்லாம் உமது நினைவுடனே
காத்திருப்போம்
நீர் சென்ற இடம் ஏதோ?
சிந்தித்துப் பார்க்க முடியவில்லையே!
ஓடிவிட்டது நாற்பத்தைந்து நாட்கள்
உன் உயிர் வீழ்ந்த
சிவந்த இடம் நிறம் மாறுதையா!
ஆனால் நீர் சிந்திவிட்டுச் சென்ற
சிரிப்பலைகள் எம்மை தினம் தினம் வாட்டுதையா!
கோடிகள் குவிந்தாலும்
கோபுரங்கள் உயர்ந்தாலும்
உன் நினைவலைகள் எம்மை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மா ஈசன் இணையடி
நிழலில் இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

அன்பு மனைவி, அன்பு மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'திருத்தணிகை',
98, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

இளங்கதிர் சனசமூக நிலையம்
பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியின் கட்டட நிதிக்காக 20.05.89 இல் நடத்தப்பட்ட அதிஷ்டலாபச்
சீட்டிழுப்பு முடிவுகள்:-

1ஆம் பரிசு:- 908　2ஆம் பரிசு:- 147　3ஆம் பரிசு:- 882

ஆறுதல் பரிசுகள்:- 914, 180, 992, 470, 039

—நிர்வாகசபையினர்
(700)



## ECALOM TUITION CENTRE

90ஆம் ஆண்டு
பொருளியல்
"கேள்விக் கோட்பாடு"
சனி / ஞாயிறு } 5-00 மணி
ஆரம்பம்:- 27-05-89 மாலை 5-00 மணி

புதிய பிரிவு
90ஆம் ஆண்டு
வர்த்தகமும் நிதியமும்
திரு. ரட்ணம்
89 பகுதி II
வினாவிடை
வர்த்தகமும் நிதியமும்
ஆரம்பம்:- 30-05-89 மாலை 3-00 மணி
No. 153, Navalar Rd.
(மனோகரா தியேட்டர் சந்தி)
(C/2631)


# பாவனையாளர்களுக்கு கடன் அடிப்படையில் பொருள்கள்

## கூட்டுறவுத் திணைக்களம் திட்டம்

கொழும்பு, மே 28
கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளருக்குக் கடன் அடிப்படையில் பொருள்களை வழங்கும் புதிய திட்டம் ஒன்று விரைவில் அமுல் நடத்தப்படவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தனியார்துறை கடைச் சொந்தக்காரர்கள் தமது கடைகளில் நம்பிக்கையின் பேரில் அயலவர்களுக்கு கடனுக பொருள்களை விற்று மாத இறுதியில் அதற்கான பணத்தை அறவிடுகின்றனர்.

அதுபோன்று கூட்டுறவுச் சங்கங்களும் கடன் அடிப்படையில் பொருள்களை வழங்கி மாத இறுதியில் பணத்தை அறவிட புதிய திட்டம் இடமளிக்கிறது.

கிராம வங்கிகளில் பணத்தைச் சேமிப்பில் வைத்திருக்கும் பாவனையாளர்களுக்கு அதனைப் பிணையாக வைத்துக் கூட்டுறவுக் கடைகளில் கடனுக்கு பொருள்களை வழங்கும் திட்டம் தற்சமயம் நடைமுறையில் உள்ளது.

இதுபோன்றே புதிய திட்டமும் அமைகின்றது.

புதிய திட்டம் நாடுமுழுவதும் 285 கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக 7950 கூட்டுறவுச் சங்கக்கடைகள் மூலம் அமுல் நடத்தப்படும். (இ.எ)

# பல்கலைக்கழக மாணவன் கொலை செய்யப்பட்டு எரிப்பு?

கொழும்பு, மே 28
றுகுணு பல்கலைக்கழக கலைப்பீட 2 ஆம் வருடமாணவன் உபுல் எதிரிரத்ன கடந்த 12 ஆம் திகதி கொலைசெய்யப்பட்டு பின்னர் அவரது சடலம் எரிக்கப்பட்டதாக பல்கலைக் கழகங்களில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சங்கத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

இம் மாணவன் கடந்த ஏப்ரலில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டார் என்றும் கெட்டன்வில்ல தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த போதே மாணவன் கொல்லப்பட்டார் என்றும் சங்கம் அறிவித்திருக்கிறது.

இம் மாணவன் சென்ற 12 ஆம் திகதி கொல்லப்பட்டு அக்குரஸ்ஸ அருகே உள்ள லெனபட்டுவ குளத்தருகே அவனின் சடலம் எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், மே 28
முல்லைத்தீவுப் பகுதி வியாழனன்றுவழமைக்குத்திரும்பியது, மக்கள் தமது அன்றுட அலுவல்களைத் தடங்கலின்றிக் கவனித்தனர்.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு நகரத்தில்உள்ள இயக்க அலுவலகம் ஒன்றின் மீதுதாக்குதல் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

இத்தாக்குதலை அடுத்து ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் அதனுல் சிறிது பதற்ற நிலை ஏற்பட்டதாகவும் முல்லைத் தீவில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதலின்போது ஒரு சிறுவனுக்கு காலில் காயம் ஏற்பட்டது. (ஒ-10)

# நெடுங்கேணிப் பகுதியில் பதற்றம் தணியவில்லை

யாழ்ப்பாணம், மே28
நெடுங்கேணிப் பகுதியில் இன்னமும் பதற்ற நிலைமை முற்ருகத் தணியவில்லை என்று தெரியவருகிறது.

கடந்த 13ஆம் திகதி நெடுங்கேணி நகரிலும், ஒலுமடு, குழவிசுட்டான் பகுதிகளிலும் இடம்பெற்ற தாக்குதல்களை அடுத்து அப்பகுதி மக்கள் அயல் கிராமங்களான ஆனந்தப் புளியங்குளம், பூவரசங்குளம், மாருஇலுப்பை, வவுனியா போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றிருந்தனர்.

அப்பகுதியில் உள்ள உறவினர்கள் இல்லங்களிலும், பாடசாலைகள், கோவில்களில் தஞ்சம் அடைந்திருக்கும் அகதிகளுக்கு சர்வோதயத்தினர் உடனடியாக அத்தியாவசியப் பொருள்களை வழங்கினர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் உதவிகளை வழங்க சர்வோதயம் நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது. [ஒ-51]

## மாணவர்கள் கடத்தப்பட்டனர்

தென் பகுதியில் கடந்த திங்கள் இரண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்றினுல் கடத்திச் செல்லப் பட்டனர்.

பலப்பிட்டி பஸ் நிலையத்தில் பட்டப்பகலில் இக்கடத்தல் இடம்பெற்றது.

தீவிரவாத எதிர்ப்புக் குழுவினரால் அவர்கள் கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)


## மேற்கு ஜேர்மன், கனடா பிரயாண ஒழுங்குகள்

உடனடியாகக் கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். எவ்வித சிரமமும் இன்றி கூடிய சீக்கிரம் அனுப்பி வைக்கப்படும்.

சந்திக்கும் நேரம்:
காலை 9.00 மணி — 12.00 மணி
மாலை 2.00 மணி — 4.00 மணி

முகவரி:-
**K. S. RAVI,**
**Hotel Annakkili,**
331, Main Street,
Jaffna.
(11064)



ஓம் சக்தி!

கிரேக்க கப்பல்களில்

## வேலை வாய்ப்புகள் (உடனடியாக)

AB　OILER
BOSON　FRESHERS (புதியவர்கள்)
மற்றும்: OFFICERS
RADIO OFFICER　ELECTRICIAN
IInd OFFICER　IIIrd ENGINEER

மற்றும்
★ கனடா ★ ஜேர்மன் ★ பிரான்ஸ் ★ இத்தாலி ★ சுவிஸ் ஆகிய நாடுகளுக்கான
● பிரயாண ஒழுங்குகள்
● பாஸ்போர்ட் ● பொன்ட்
ஆகியனவும் செய்து தரப்படும்.

"முற்பணம் அறவிடப்படமாட்டாது"

சந்திக்கும் நேரம்:-
காலை 6. 00 மணி — 8. 30 மணி
மாலை 3. 30 மணி — 7. 00 மணி

**சுஜிதா என்ரபிறைசஸ்**
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
சிறுப்பிட்டி முருகன் ஸ்ரோர்ஸில் விசாரிக்கவும்.
(பப்பன் கடை)　C/2569)



## பிரயாண ஒழுங்குகள்
## உடனடி வேலைவாய்ப்புகள்

### ★ குவைத்

| | |
|---|---|
| றைவேர்ஸ் H. V. | 75 K.D. |
| வீட்டு றைவேர்ஸ் | 60 K.D. |
| சுப்பர்வைசர்ஸ் | 75 K.D. |
| அலுமீனிய தொழிற்சாலை லேபரர்ஸ் | 70 K.D. |

### ★ சவூதி அரேபியா

| | |
|---|---|
| றைவேர்ஸ் | 650 S.R. |
| லேபரர்ஸ் (கிளீனிங்) | 450 S.R. (அல்ராஜ்) |
| காப்பென்ரேர்ஸ் | 650 S.R. |
| மேசன்ஸ் | 700 S.R |
| இலக்ரிசன்ஸ் | 800 S.R. |
| வெல்டேர்ஸ் | 700 S.R. |

முற்பணம் அறவிடப்பட மாட்டாது.

தொடர்பு:-
**நியூயோர்க் ரவல்ஸ்**
K. K. S. வீதி,
மல்லாகம்.
[சி-2638]







மாகாணசபைத் தேர்தல் வழக்கு

# அழைப்பாணைகளைக் கையளிக்க பிஸ்கால் பொறுப்பெடுத்தார்

கொழும்பு, மே 28
மாகாணசபைக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட தேர்தலை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த வாரம் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இம்மனுவைக் கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த பூபாலபிள்ளை சந்திரகுமார் தாக்கல் செய்திருந்தார்.

திருகோணமலை நீதிமன்ற பிஸ்கால் திரு. கே. மகேந்திரராஜா நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கின் முதல் எட்டு எதிர் மனுதாரர்களிடத்தும் நீதிமன்ற அழைப்பாணையை கையளிக்க முடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயலாளர் மூலம் சபையின் உறுப்பினர்களான சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்களிடம் அழைப்பாணையைக் கையளிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ. டி. இலட்குணவர்த்தன உத்தரவு பிறப்பித்தார்.

இதற்காக மாகாணசபைச் செயலாளரிடம் சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்களுக்குரிய நீதிமன்ற அழைப்பாணைகளை கையளிப்பதாக திருமலை நீதிமன்றப் பிஸ்கால் திரு. மகேந்திரராஜா பொறுப்பு எடுத்தார்.

முதல் எட்டு எதிர் மனுதாரர்களுக்கும் அழைப்பாணை கொடுக்கப்பட்டதா என்பதை வருகிற ஜூன் 2 ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிபட்டு தெரிவிக்கும்படி பிஸ்காலுக்கு நீதியரசர் உத்தரவிட்டார்.

இந்த மனுவில், வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட தேர்தலைச் செல்லுபடியாகாது என்று அறிவிக்கும்படி மனுதாரர் கோரியுள்ளார். (இ-எ)


Dr. கலைஞர் மு. கருணாநிதி கி.மு.
**கல்வி நிலைய**
[வட்டுக்கோட்டை]

## பொது அறிவுப் போட்டி முடிவுகள்

முதல் பரிசு
T. N. நரேஸ், நாயன்மார்கட்டு,
இரண்டாம் பரிசு
J. மேரி கிமோல்டா, கோப்பாய் தெற்கு.
மூன்றும் பரிசு
A. கனிஸ்டன், 1/25, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
S. சிவராஜ் (வி. க தில்லர்)
T. P. பிறட்மன் (போட்டி ஆலோசகர்)



# சிங்கர்*
## களிப்பு நிறைந்த
## குளிரூட்டிப் போட்டி

**1ம் மாதாந்தச் சீட்டிழுப்பு 1989 மே 5ம் திகதி சதாம் வீதி சிங்கர் காட்சியறையில் நடைபெற்றது.**

### வெற்றியீட்டிய 25 அதிஷ்டசாலிகள்

முதலாம் பரிசு:
எச். ஆர். ஹேமரத்ன, 17, சமாஜசாலை வீதி, கேகாலை

இரண்டாம் பரிசு:
ரி. அபுபக்கர், பேகம் பிளேஸ், சாயிந்தமருது 2, கல்முனை
எம். ரணசிங்க, 'சூரியமல் கார்டின்ஸ்' ரஞ்சுகாவ, கினிகத்தேன
கே. டப்ளியூ. கவிதிலக, கலுவாக்கல்ல
எஸ். என். எல். எம். ராயிலு, 33, ஸ்பில் வீதி, புத்தளம்
எஸ். பி. டி. சில்வா, புல்வல்துவ வத்தை, நிந்தான
ஆர். ஏ. டி. மெனல், 422, ஹெந்தல வத்தை

மூன்றும் பரிசு:
பி. ஏ. மெத்தசேன, 15, பராக்கிரம மாவத்தை, கந்தளாய்
பி. ஏ. டி. இந்திராணி, 63, குகம் கலீல் பிளேஸ், களுத்துறை தெற்கு
ஜே. பத்மாவதி, மே/பா. ரவீந்திர ஜுவலேர்ஸ், கண்டி வீதி, கினிநொச்சி
என். ஜி. சுமரத்ன, 7, பாரதெக்க
எம். காமினி விமலசிறி, 3பி, யாயின்ன, ஆர்/கஹவத்தை
எம். பி. ஜி. ரத்நாயக்க, 14, பிலிஹேன வீதி, பதுளை
ஜயலத் இத்தகொட, கந்தவத்தை, ஸ்பாநுர, பதுரெலிய
கே. டப்ளியூ. லீலாரத்ன, திம்பொத்துவாவ, எஹலியகொட
டப்ளியூ. பி. எம். ஜீ. வீரசேகர, மல்லிகா ஸ்டோர்ஸ், ஹெட்டிபொல
டெரிக் றெபேர்ட், 140, கொரவலப்பிட்டிய வீதி, ஹெந்தல வத்தை
சு. சந்திரஹாசன், 3ம் ஒழுங்கை, ஸ்பில் வீதி, புத்தளம்
ஜே. எஸ். ஏ. பெரேரா, 16, சென். ஆன்ஸ் வீதி, வெலிகம்பிற்றிய, ஜா எல
டப்ளியூ. ஜே. பி. எஸ். இந்திரஜித் பெர்னுண்டோ, நிவிபொல, நன்புராவ, பிபிலே
ஆர். அமிர்தலிங்கம், இலக்கடி, காரைநகர்
எஸ். எம். கவில் ஆனந்த, உட தேஹவாபொல, பில்லவல
ஸி. கே. குமாரசிங்க, 115, கலகெதர, கண்டி வழியாக
ஜே. கே. ஜீ. ஜயசிங்க, அபேகுணரத்ன மாவத்தை, பழைய மாத்தறை
பி. எல். தயாவதி, 'தவானி' பட்டத்த, ஹங்கம

**சிங்கர்***
மாசற்ற மேன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 160ஆவது
## தென் இந்திய யாத்திரைச் சுற்றுலா

### ஆவணி பாடசாலை லீவு நாட்களில்

**இடங்கள்:**

திருச்சி, மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருவானைக் காவல், சுசீந்திரம், ஆகாயத்தில் நவக்கிரகங்கள், ச- ரி- க- ம- ப- த- நி- ச நாதங்கள், மிருதங்க ஒலி, ஜலதரங்க ஒலிகளை எழுப்பும் கல் தூண்கள், பல்லாயிரக் கணக்கான சங்குகளை அரைத்து உருவாக்கப்பட்ட சங்கு நந்தி, கன்யாகுமரி, அரபிக்கடல் - இந்து சமுத்திரம்- வங்காளவிரிகுடா ஒன்று சேரும் திரிவேணி சங்கமம், விவேகானந்தர் பாறை, காந்தி மண்டபம், குற்றாலம் நீர்வீழ்ச்சியில் குளித்தல், கருப்பஞ்சாறு - முட்டை- களிமண்ணால் கட்டப்பட்ட திருமலைநாயக்கன் அரண்மனை, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயங்கள். கோடைக்கானல் ரோட், 27 மயிர் சிலிர்க்கும் வளைவுகளைக் கொண்ட திம்பம் மலை ஏறுதல், மைசூர், மகாராஜா அரண்மனை, சாமுண்டீஸ்வரி அம்மன், ஒருகல் நந்தி, பிலோமினா தேவாலயம், பிருந்தாவனம், பங்களூர், திருப்பதி, மட்ராஸ், மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம். வி. ஜி. பி. தங்கக்கடற்கரை, நந்தனுருக்கு நந்தி விலகிய திருப்புன்கூர், சிதம்பரம், தஞ்சாவூர், ஆறுபடை வீடுகள், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, திருத்தணி மற்றும் பல.

### ✯ ராஜா டூர்ஸ் ✯
**168/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

வடமாகாணத்தில் அரசாங்க உல்லாச பயணசபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஸ்தாபனம். 28 வருட அனுபவஸ்தர்கள் ஒழுங்கு செய்யும் இவ்விஷேட யாத்திரையில் ஆசனங்கள் வேகமாகப் பதிவாகின்றன. இடத்திற்கு முந்துங்கள்.

(சி/2754)


## கண்ணீர் அஞ்சலி

### செல்வன் சின்னத்தம்பி இன்பநாதன்

14 - 04 - 1989 அன்று அகால மரணமடைந்த சமரபாகுவை சேர்ந்த செல்வன் சின்னத்தம்பி இன்பநாதன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சமரபாகு, வல்வெட்டித்துறை.

தி. சுபாகரன்,
சி. யோகராஜா (செல்வம்)

(11040)

## நடன - நல்லிசை கலாமன்ற ஆண்டுவிழா

குருநகர், மே 28

குருநகர், நடன-நல்லிசைக் கலாமன்றத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும்.

யாழ். பிரதான வீதி, 223 ஆம் இலக்க, கலாமன்ற மண்டபத்தில் நடைபெறும் இந்த விழாவுக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண பிதா, பி. எம். இம்மானுவேல் அடிகள் தலைமை வகிப்பார்.

யாழ். பதில் அரசாங்க அதிபரும், கிளிநொச்சி அரச அதிபருமான திரு. அன்ரன் அல்பிரட் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

பேராசிரியர், கலாநிதி வண நீ. ம. சவிரிமுத்து அடிகள் சிறப்புரை வழங்குவார்.

குருநகர் நடன - நல்லிசைக் கலாமன்ற மாணவ - மாணவிகளது நாட்டிய நாடகம், மிருதங்கம், வயலின், வீணைக் கச்சேரி, நடன நிகழ்ச்சிகள் விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

நிகழ்ச்சிகளை போதனாசிரியர்களான திரு. தொம்மைக் குட்டி, திரு. த. பாக்கியநாதன், திரு. எஸ். தார்சிசியஸ் ஆகியோர் தயாரித்து வழங்குவர். [இ-51]

## திருப்பணிச் சபை

மாங்குளம், மே 28

வன்னிவிளாங்குளம் கண்ணகி அம்மன் ஆலய நடப்பு வருட திருப்பணிச் சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு.ஆ நடராசா செயலாளர்:- திரு, மா. வா. சிங்கமாப்பாணர் பொருளாளர்:- சிவஞானமூர்த்தி (ச-94)

## ஆய்வு நிறுவனம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 28

கொக்குவில் பகுதியில் ஈரோஸ் இயக்கத்தினால் நடத்தப்பட்டுவந்த "ஆய்வு" நிறுவனம் இடம்மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் இருந்த கட்டடத்தில் அமைதிப்படையினர் முகாம் அமைக்கலாம் என்று தெரியவருகிறது.

இந்த கட்டடத்தை விட்டு வெளியேறும் படி அவர்களால் பணிக்கப்பட்டது என்று தெரியவருகிறது.

நிறுவனம் தற்பொழுது தற்காலிகமாக நல்லூருக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

ஆயினும் விரைவில் புதிய கட்டடம் ஒன்றில் நிறுவனம் செயல்படத் தொடங்கும் என்றுதெரியவருகிறது.

## கோப்பை சுமக்கும் மாணவர்கள்!

தற்போது கல்வி அமைச்சின் பணிப்பின் பேரில் பாடசாலைகளில் விநியோகிக்கப்பட்டு வரும்மதியஉணவைப்பெற்றுக் கொள்வதற்கு மாணவர்கள் தமது புத்தகங்களுடன் கோப்பையையும் சுமந்து செல்கின்றனர்

சிலமாணவர்கள்இதற்காகப் பிரத்தியேகமான பைகள் தைத்து வைத்திருக்கிறார்கள். (ச-160)


யாழ்ப்பாணம்
கல்வித்திணைக்களம்

முறைசாராக் கல்விப் பிரிவுகளுக்கான
தற்காலிக
## போதனாசிரியர் பதவிகள்

வாகனங்களுக்கான மின்னிணைப்பு, தொலைக்காட்சி திருத்துதல், மோட்டார் சைக்கள் திருத்துதல், மேசன் வேலை, தகர வேலையும், வாயு ஒட்டு வேலையும், மின்னொட்டு வேலை ஆகிய பாடநெறிகளைப் போதிப்பதற்குப் போதனாசிரியர் தேவை.

**தகைமைகள்:-**

(1) ஆகக் குறைந்தது 2 வருட செயல்முறை. அறிமுறைப் பயிற்சியுடனான தொ. நு. கல்விச் சான்றிதழ் அல்லது சமனான சான்றிதழ். விண்ணப்பதாரிகள் செய்முறை, அறிமுறை சார்ந்த நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும்.

**கொடுப்பனவு:**

மணித்தியாலம் 25 ரூபா வீதம் மாதம் 60 மணித்தியாலம் போதிக்க வேண்டும்.

தகுதியானோர் முழு விபரங்களுடனான விண்ணப்பத்தைப் பிரதிக்கல்விப்பணிப்பாளர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 3- 6- 1989க்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

செல்வி. தி. பெரியதம்பி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

[சி/2665]


## முதலாம் வருட நினைவஞ்சலி



### திரு. க. இரத்தினசிங்கம்

பிறப்பு: 18 - 05 - 1943
இறப்பு: 07 - 06 - 1988

பிராணனுக்கு நாதனானீர்கள்
பிள்ளைகளுக்குப் பிதாவானீர்கள்
இன்னும் விளைவுகளுக்கும் மகிழ்வுகளுக்கும்
காலம் இருக்கிறது இதற்குள் நீங்கள்
ஏன் ஐயா, காலமானீர்கள்?
விளையும் பயிர்களை முளையிலே
வாடவும், வேண்டிய சுற்றம்
முகம்வாடி ஏங்கவும் விதி சதி
செய்து விட்டதா?
உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காய்
நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.
எங்கள் எதிர் காலத்துக்காய்
நீங்கள் இறங்கி வர மாட்டீர்களா?

மனைவி,
பிள்ளைகள்: இ. சிவகணேஷ், இ. சிவகோபி, இ. சிவசத்தியன், இ. சிவரமணன்.

''திருத்தணிகை',
12 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[11053]


# ★ வெளிநாட்டுப் பிரயாணங்கள் ★

## குறைந்த கட்டணங்களில் விமான டிக்கற்றுக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| ✶ கொழும்பு / மதராஸ் | ரூபா | 2000.00 |
| ✶ கொழும்பு / திருச்சி | ரூபா | 1413.00 |
| ✶ கொழும்பு / திருவனந்தபுரம் | ரூபா | 1345.00 |
| ✶ கொழும்பு / சூரிச் | ரூபா | 11750.00 |
| ✶ கொழும்பு / மேற்கு ஜேர்மனி | ரூபா | 11750.00 |
| ✶ கொழும்பு / ரோம் | ரூபா | 11750.00 |
| ✶ கொழும்பு / ஒஸ்லோ | ரூபா | 11750.00 |
| ✶ கொழும்பு / டுபாய் | ரூபா | 7700.00 |
| ✶ கொழும்பு / மஸ்கட் | ரூபா | 7700.00 |
| ✶ கொழும்பு / டோகா | ரூபா | 9990 00 |
| ✶ கொழும்பு / பாரேயின் | ரூபா | 9990.00 |
| ✶ கொழும்பு / டாரான் | ரூபா | 8900.00 |
| ✶ கொழும்பு / றியாட் | ரூபா | 9195.00 |
| ✶ கொழும்பு / குவைத் | ரூபா | 9650.00 |
| ✶ கொழும்பு / இலண்டன் | ரூபா | 11750.00 |
| ✶ கொழும்பு / சிங்கப்பூர் / கொழும்பு | ரூபா | 10125.00 |
| ✶ கொழும்பு / கோலாலம்பூர் / கொழும்பு | ரூபா | 9200.00 |
| ✶ கொழும்பு / பாங்கொக் / கொழும்பு | ரூபா | 9850.00 |

## PASSPORT, INDIAN VISA, AIR TICKETS ஆகிய ஒழுங்குகளுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

- இத்துறையில் நல்ல அனுபவமுள்ளவர்களால் சிறந்த ஆலோசனைகள் கடமைப்பாடு அல்லாமல் முழுமையாக வழங்கப்படும்.
- திருவனந்தபுரம், திருச்சி Madras ஆகிய நகரங்களுக்கு இந்திய விசாவுடன் உறுதிப்படுத்தப்பட்ட விமான டிக்கற் ஒழுங்குகள் மிகவும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
- உலகில் எந்த நாட்டிற்கும் [India, Australia, Canada, America, Singapore, Bangkok மற்றும் நாடுகளுக்கும்] கொழும்பில் பெறும் கட்டணத்திலேயே யாழ்ப்பாணத்தில் டிக்கற் வழங்கப்படும்.
- Confirmation, Reconfirmation, Cancellation of Tickets ஆகியவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- பாஸ்போட், பொண்டிங், Extension ஆகியவைகளும் துரிதமாகச் செய்து கொடுக்கப்படும்.

MACK

# MACK TRAVELS (Pvt) Ltd.,

**No 8, FIRST LANE, POINT PEDRO ROAD, JAFFNA.**

(c-2661)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

**பொருள்:**

நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805, 22073
28 - 05 - 1989
அ: பெ: இல: 88

# நல்ல முன்னுதாரணம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் நல நிதியத்துக்கு, சிங்கப்பூரில் வாழும் திரு. எஸ். ஆனந்தக்கிருஷ்ணன் என்ற அன்பர் மூன்று லட்சத்து நாற்பதாயிரம் ரூபாவை அன்பளிப்பாக அனுப்பி வைத்திருக்கிறார்!

அந்தப் புரவலரின் தாராள மனதையும், தமிழ் மாணவரின் கல்வி வளர்ச்சியில் உள்ள அதீத அக்கறையையும், எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரின் சார்பில் பாராட்டுகின்றோம்; நன்றி கூறுகின்றோம். வெளிநாடு ஒன்றில் வாழ்ந்த போதிலும், பிறந்த மண்ணின் நலன் மறவாத நற்பண்பை வியந்துரைக்கிறோம்.

பல்கலைக்கழகத் துணை வேந்தர் நல நிதியம் கடந்த 1988 நவம்பர் மாதத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவுவதும், எதிர்பாராத சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்படும் மாணவருக்கு நிவாரணம் வழங்கி, உயர்கல்வி பாதிப்புறாமல் உதவுவதுமே நிதியத்தின் பிரதான குறிக்கோள்கள்.

பல தடங்கல்கள், புறக்கணிப்புகள், வசதிக் குறைவுகள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் உயர்கல்வி வாய்ப்புப் பெறும் தமிழ் மாணவர், தமது கல்வியைப் பூரணமாகப் பெறமுடியாமல் இடைநிறுத்த உந்தப்படுவது, தள்ளப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்; தடுக்கப்பட வேண்டும்.

அந்த நோக்கில், துணை வேந்தர் நல நிதியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு வரப்பிரசாதமாகும். நிதியம் வரப்பிரசாதமானது என்ற நிலையை யதார்த்தமாக அடைவதற்கு அதற்கு போதிய நிதி சேரவேண்டும்; நிதியம் பருத்துப் பெருக்க வேண்டும்.

தமிழ் மாணவர் நலனைச் சீரிய நிலையிலும், உயரிய தரத்திலும் பேணுங்கால், ஒவ்வொருவரும் இயன்றவரை நிதியத்துக்கு உதவ வேண்டும். வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் பங்கு இதற்குப் பெரிதும் வேண்டப்படும். நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்; நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்; அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர் என்பது இதற்கு எல்லாவிதங்களிலும் பொருந்தும் —

இவ்வாறு ''நல்ல காரியம்'' என்ற மகுடத்துடன் இப்பத்தியில் 4. 11. 1988 இல் எழுதி இருந்தோம்.

சிங்கப்பூரில் வாழும் அன்பர் ஆனந்தக்கிருஷ்ணன் ஏனையவர்களுக்கு முன் மாதிரி காட்டி இருக்கிறார். வெளிநாடுகளில் உள்ள ஏனைய தமிழ் அன்பர்களும் தம்மால் இயன்றதை எமது மாணவருக்குச் செய்வார்கள் என நம்பலாம்.

இங்குள்ள அவர்களது உறவினர்கள் பிரஸ்தாப நிதியம் குறித்து வாய்ச்சொல் அருளினால், அதற்கு அளவில்லாக் கொடைகள் வந்து சேரும். தமது நெஞ்சிற்கினியவரின் நினைவாகச் சொற்ப தொகையை அவர்கள் அனுப்பி வைத்தாலும் கூட, அவை சிறு துளி பெருவெள்ளமாகப் பெருகி, நிதியம் பருத்து விடும்.

அரசியலில், பொருளாதாரத்தில், சமூகத்தில். ஏன் வாழ்க்கையிலேயே பல சோதனைகளையும், வேதனைகளையும் ஈழத் தமிழர்கள் தொடர்ந்து அனுபவித்து வந்த போதிலும், அவர்களின் வாழ்க்கைக்கு பலமாக, கொழுகொம்பாக இருப்பது கல்வி.

ஆகையால் எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரின் கல்வி நலனுக்கான சகல உதவிகளையும் செய்ய வேண்டிய சமூகக் கடமைப்பாடு இங்கு வாழ்பவர்களைப் போல, வெளிநாடுகளில் வாழும் சகல ஈழத்தமிழருக்கும் உண்டு.

நெருக்கடியான காலங்களில் இங்கு வாழாமல், அதிர்ஷ்ட வசமாகத் தப்பிக் கொண்டவர்கள், தமது உடன் பிறப்புக்களுக்கும், எதிர் காலச் சந்ததிக்கும் பல வகைகளிலும், பல மடங்குகள் உதவி செய்ய வேண்டிய கடமைப்பாடு உடையவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. ஆயிரம் ஆயிரம் ஆனந்தக்கிருஷ்ணன்கள் தமது கடமைப்பாட்டை உணர்ந்து செயற்பட்டால், அவர்கள் வெளிநாடு சென்றதால் சிறிதளவு பயனாவது கிடைத்ததே என்று ஆறுதல் அடையலாம்.

# அதிகாரப் போராட்டத்தில் சீனப் பிரதமர் வெற்றி

பீகிங், மே 27

இரண்டு வார காலமாக சீனத் தலைநகர் பீகிங்கில் நடைபெற்று வரும் ஜனநாயக உரிமைகளுக்கான மாணவர் போராட்டம் தளர்ந்து ஓய்ந்து கொண்டு வருகின்றது.

தற்பொழுது சுமார் பத்தாயிரம் மாணவர்கள் தான் பீகிங் நகரத்தின் மத்தியில் உள்ள தியென் அன் மென் சதுக்கத்தில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இச் சதுக்கமே மாணவர் போராட்டத்தின் குவிமையமாக விளங்கியது.

மாணவர்களின் தாக்குதலுக்கு இலக்காக அமைந்த சீனப் பிரதமர் லிபெங் இந்த அதிகாரப் போராட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார் என்று கருதப்படுகிறது.

இது தவிர, பீகிங்கில் வாழ்க்கை சகஜ நிலைமைக்குத் திரும்பியுள்ளது. போக்குவரத்து வழக்கம் போல செயற்படுகின்றது. கடைகள் எல்லாம் திறக்கப்பட்டுள்ளன.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி லித்தியக் கமிட்டி பிரதமர் லிபெங்கை முழுதாக ஆதரிப்பதாக அறிய வருகின்றது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான சாவ் சியாங் பதவி இழக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (க)

## பி. பி. சி. வேலை நிறுத்தம்

லண்டன், மே 27

பி. பி. சியின் பத்திரிகையாளர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் 24 மணித்தியாலம் வேலை நிறுத்தம் ஒன்றை வெளியன்று மேற்கொண்டனர்.

இதனால் பி.பி.சியின் உலக சேவைகள் பாதிக்கப்பட்டன.

பி. பி. சி. ஊழியர் மேற்கொண்ட இந்த வேலை நிறுத்தம் நான்காவதாகும்.

17 சத வீத சம்பள உயர்வு கோரி அவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் பி.பி.சி. நிர்வாகமோ 7 சத வீத சம்பள உயர்வு வழங்க இணங்கியுள்ளது. (எ)

## நேருவின் மறைவு தினம்

டெல்லி, மே 27

காலஞ்சென்ற இந்தியப்பிரதமர் ஜவஹர்லால்நேருமறைவின் 25 ஆவது ஆண்டு நிறைவு இன்று இந்தியா பூராவும் அனுஷ்டிக்கப்பட்டது. [க]

# சோவியத் அதிபரின் கரங்களில் அதிகாரங்கள் குவிகின்றன

மொஸ்கோ மே 27

சோவியத் யூனியனின் புதிய நிர்வாக அதிபராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கு அமெரிக்க ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் உள்ளன என அறியப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதியைப் போலவே கோர்பச்சேவ் அரசின் வெளிநாட்டுப் பாதுகாப்புக் கொள்கைக்குத் தலைமை வகிப்பார்; பேச்சுவார்த்தைகளை நடத்தி சர்வதேசிய ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவார்; சட்டங்களைப் பிரேரிப்பார்; நாட்டின் நிலைமைபற்றி கிரமமான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பார்.

ஆனால் சோவியத் யூனியனின் ஒரு கட்சி ஆட்சியுடன் இந்த அதிகாரங்கள் சேரும் போது கோர்பச்சேவின் அதிகாரம் பிரமாண்டமானதாக இருக்கும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

## அரிசியில் சாதனை புரிந்த இந்தியர்

ஜெய்ப்பூர், மே 27

ஒரு மணி அரிசியைக் கொண்டு 247 எழுத்துக்களை எழுதி ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சுரேந்திரா ஆச்சாரி உலக சாதனை நிகழ்த்தியிருக்கிறார்.

இச் சாதனையைப் புரிந்த சுரேந்திரா ஆச்சாரியின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

ஜப்பானைச் சேர்ந்த சிஸ்டமோ என்பவர் இத்துறையில் முன்னர் நிகழ்த்திய சாதனையை ஆச்சாரி முறியடித்துவிட்டார். (ஓ-எ)

## அமெரிக்க ஜனாதிபதியின் ஐரோப்பிய பயணம்

ரோம், மே 27

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் ஐரோப்பிய பயணம் ஒன்றை மேற்கொண்டு அதன் முதற் கட்டமாக இத்தாலியின் தலைநகரமான ரோமை வந்தடைந்துள்ளார்.

''கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலுள்ள தடைகளை நீக்குவதே தமது பயணத்தின் நோக்கம்'' என்று கூறிய ஜனாதிபதி புஷ், ''சோவியத் யூனியனை தேசங்களின் சமூகத்துக்குள் கொண்டு வர அமெரிக்கா முயற்சி எடுக்கும் என்றும் கூறினார்.

இந்த வார இறுதியில் பிரசல்சில் நடைபெறும் நேட்டோ உச்சி மாநாட்டில் ஜனாதிபதி புஷ் கலந்து கொள்வார். (க)

## கொரிய மாணவரின் உண்ணாவிரதம்

சியொல், மே 27

தென்கொரியாவில் சுமார் 100 கல்லூரிகளினதும் பல்கலைக் கழகங்களினதும் 500 மாணவர் பிரதிநிதிகள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் ஒரு மாணவன் பொலிசாரால் கொல்லப்பட்டதை ஆட்சேபித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள்.

இதற்கிடையில் கொரியாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 300 மாணவர்கள கலகம் அடக்கும் பொலிசாருடன் கைகலப்பு ஒன்றை நடத்தினார்கள். (க)

## அரபு லீக் உச்சிமாநாடு

மொரொக்கோ தலைநகரான கஸபலங்காவில் நடைபெற்ற அரபுலீக் அமைப்பு நாடுகளின் உச்சி மாநாடு முடிவடைந்த போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கை, இடம் கொள்ளப்பட்ட பிரதேசங்களில் இருந்து இஸ்ரேல் உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்று கோருகின்றது.

லெபனானில் உள்ள சகல தரப்புகளும் யுத்த நிறுத்தத்துக்கு கண்டிப்பாக மதிப்பளிக்க வேண்டுமெனவும் கூட்டறிக்கை கூறுகின்றது.

1979 ஆம் ஆண்டில் இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்ட எகிப்து இம்முறை 10 ஆண்டுகளுக்குப் பின் இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. [க]

# தி. மு. க. அரசு கடல் மண்ணில் வீடு; அடுத்த அலையில் அள்ளுண்டு போய்விடும்!

## முன்னாள் அமைச்சர் காளிமுத்து கிண்டல்

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க வில் மீண்டும் இணைந்த பின்னர் முன்னாள் அமைச்சர் திரு. கே. காளிமுத்து காஞ்சிபுரத்தில் முதலாவது பொதுக்கூட்டத்தில் பேசினார்.

அவர் சொன்னதாவது;

இருண்ட தமிழகத்தில் வெள்ளிக் கீறு போன்று ஜெயலலிதா தென்படுகிறார். அனைவரும் அவரின் கையைப் பலப்படுத்த வேண்டும்.

ஜெயலலிதாவை காரசாரமாக நான் கண்டித்து வந்தது உண்மைதான். அதுபற்றி அவர் கவலைப்படவில்லை. அப்படி பண்பு நிறைந்த ஒருவரின் கட்சியில் சேருவதில் என்ன தவறுஉண்டு?

ஜெயலலிதாவிடமிருந்து 27 லட்சம் ரூபா பணத்தை வாங்கிக் கொண்டு தான் அவருடன் சேர்ந்திருப்பதாக என் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான தொழிலாளரின் வியர்வையிலும் இரத்தத்திலும் உருவான ஒரு கட்சியில் சேர்வதற்கு நான் பணம் வாங்குவேனா?

தனிப்பட்டவர்களின் கௌரவம், பெருமை முக்கியமல்ல; கட்சியின் கௌரவம் தான் எனக்கு முக்கியம்.

தி. மு. க அரசு, கடற்கரையில் மண்ணினால் கட்டப்பட்ட ஒரு வீடு அடுத்த அலையில் அந்த வீடு அள்ளுப்பட்டு போய்விடும்.

இப்படி திரு. காளிமுத்து சொன்னார். [எ]

# சீனப் புத்திஜீவிகளின் கறுப்புப் பட்டியல் தயார்

சீனாவில் மாணவர் போராட்ட அலை ஓய்ந்துவிட்டது. தெங்சியாங்பெங்லிபெங் போன்றோரின் குழு அதிகாரப் போராட்டத்தில் வெற்றிகண்டுள்ளது.

மாணவர் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதில் தெங்சியாங்பிங்கே உண்மையான சூத்திரதாரி என்று பி. பி. சி. வானொலிக்குப் பேட்டி அளித்த புத்திஜீவி ஒருவர் கூறினார்.

சீனாவில் இப்போராட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு எதிராக கொடிய அடக்குமுறை அவிழ்த்து விடப்படும் எனவும் அவர் கூறினார்.

பீகிங் மாநகர கம்யூனிஸ்ட் கட்சிக் கமிட்டி ஏற்கனவே 35–40 புத்திஜீவிகளின் கறுப்புப்பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளதாம்.

சீனமாணவர் போராட்டம் சில எதிர்ப் புரட்சிவாதிகளால் தூண்டிவிடப்பட்டது என்றே சீன அதிகார வட்டாரங்கள் கூறுகின்றன. [க]

## நைஜீரியாவில் மாணவர்கிளர்ச்சி

பெனின், மே 27

நைஜீரியாவின் தென்பகுதி நகரமான பெனின் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தில் ஒருவர் பாதுகாப்புப் படைகளால் கொல்லப்பட்டதாக அறியவருகின்றது.

அரசாங்கத்தின் சிக்கன பொருளாதார நடவடிக்கைகளை எதிர்த்தே பெனின் மாணவர்கள் கிளர்ச்சி செய்கின்றார்கள். அவர்கள் டயர்களைக் கொளுத்தி பாதுகாப்புப் படைகள் முன்னேறுது தடுத்துள்ளார்கள். (க)

# பெரும் இக்கட்டான நிலையிலும் டாக்டர்கள் சேவை புரிகின்றனர்

## யாழ். ஆஸ்பத்திரிக்கு வியஜம் செய்த கனேடியத் தூதர் புகழாரம்

யாழ்ப்பாணம், மே 28

வடக்கில் குறிப்பாக யாழ்-போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் பெரும் இக்கட்டான காலகட்டத்திலும் சேவையாற்றுவதையிட்டு தமிழ் மக்கள் பெருமைப்பட வேண்டும்.

இப்படிக் கூறினார் கனடாத் தூதுவர் கரோலின் எம். மக்கஸ்கி.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்த அவர் அங்கு வைத்திய பணிப்பாளர்கள், வைத்தியர்கள் ஆகியோர்களுடன் பேச்சுக்களை நடத்தினார்.

வைத்தியசாலையின் குறைபாடுகள் குறித்து அவர் கலந்துரையாடினார்.

கனடா அன்பளிப்புச் செய்த உபகரணங்களையும், மற்றும் இடங்களையும் அவர் பார்வையிட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை முதல்வருடன் மதிய போசனத்தில் கலந்து கொண்டு அவருடனும் பேச்சுக்கள் நடத்தினார்.

மாலையில் தெல்லிப்பளையில் உள்ள புற்றுநோய் விடுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் குறித்துப் பேசினார்.

அதைத் தொடர்ந்து கிரிமலைக்கேணிச் சுற்றுடலுக்குப் விஜயம் செய்து கரையோரப் பாதையால் யாழ்நகர் திரும்பினர்.

போகும் பாதையில் சில இடங்களைப் பார்வையிட்டதுடன் மக்களுடனும் அவர் உரையாடினார் (இ-3,-68)

## ஞானசம்பந்தர் குருபூசை

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயத்தில் திருஞான சம்பந்தர் குருபூசை வித்தியாலய ஆரம்ப பிரிவு அதிபர் திரு. த. திருநாவுக்கரசுவின் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கனகசபாதி நாகேஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

ஆசிரியை செல்வி க. தம்பிப்பிள்ளை நெறிப்படுத்திய ''பரசமய கோளரி'' என்ற நாடகமும் மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ஈற்றில் மாணவிகளால் பஞ்சபுராணம் ஓதப்பட்டது.

### மானிப்பாய் மகளிரில்

திருஞானசம்பந்தர் குருபூசை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாணவிகள் சம்பந்தரின் திருமுறைகளைப் பாடினர்.

செல்வி சிவகெங்கா சிவப்பிரகாசபிள்ளையின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

### மெமோறியலில்

மானிப்பாய் மெமோறியல் மகா வித்தியாலயத்தில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் குருபூசை வித்தியாலய அதிபர் திரு. அ. [illegible] சலத்தின் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரி மண்டபத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்றன.

வித்தியாலய உப அதிபர் திரு ஆ. கலியாணசுந்தரேசன் திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிச் சிறப்புச் சொற்பொழிவு [illegible]. (ச)

## யாழ். கனகரத்தினம் வித்தியாலயத்தில்

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் ஆங்கிலத் தட்டச்சுச் சுருக்கெழுத்து, தமிழ் தட்டச்சுச் சுருக்கெழுத்து, மோட்டார் பொறியியல், ஆடை தயாரித்தல், ஹோட்டல் முகாமைத்துவம் முதலிய பயிற்சி நெறிகளின் ஆரம்பவிழா இன்று 28 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. எம். இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழ வுக்கு யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி இலகவதி பெரியதம்பி பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் சிறப்புரையாற்றுவார்.

## விசேஷ ஆணையாளர்

காங்கேசன்துறை, மே 28

வலிவடக்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக திரு. வி. இராசையா நியமனம் செய்யப்பட்டுள்ளார்

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபராக பணியாற்றி வரும் அவர் இனி பிரதேச சபை விசேட ஆணையாளராகவும் கடமை புரிவார். (இ-68)

## இரசாயனவியல் புதிர்ப் போட்டி-89

# தெரிவான 8 பாடசாலைகளில் வேம்படி மகளிரும் ஒன்று

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் 'இரசாயனவியல் 1989 புதிர்ப்போட்டி' யின் கால் இறுதிப் போட்டியில் பங்கு பெறத் தெரிவான எட்டுப் பாடசாலைகளில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியும் ஒன்றாகும்.

கால் இறுதிப் போட்டி நேற்று சனிக்கிழமை நடைபெற ஏற்பாடாகி இருந்தன. இறுதிப் போட்டிகள் ஜூன் 3 ஆம் திகதி கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கக் கட்டட மண்டபத்தில் நடைபெறும்.

கடந்த 13 ஆம் திகதி நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையிலிருந்து இந்த 8 பாடசாலைகளும் கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளத் தெரிவாகின.

கால் இறுதிப் போட்டிக்குத் தெரிவான 8 பாடசாலைகளும் வருமாறு:

1. டி. எஸ். சேனநாயக்கா வித்தியாலயம் கொழும்பு 8
2. தேவி மகளிர் வித்தியாலயம், கொழும்பு - 8
3. அனந்தாக் கல்லூரி, கொழும்பு - 10
4. விசாக்கா வித்தியாலயம், கொழும்பு - 4
5. மியூசியஸ் கல்லூரி, கொழும்பு - 7
6. வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
7. பின்னவல மத்திய மகா வித்தியாலயம், நவுக்கன
8. மஹாமாய மகளிர் வித்தியாலயம், கண்டி. (இ)

# தமது நிர்வாகத் திறமையால் நன்மதிப்பை பெற்றவர்

## கோபாலரத்தினத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 28

எவரையும் நோகாமல் யாருடனும் பகைக்காமல் தனது நிர்வாகத் திறமையால் யாழ். செயலகத்தில் தமது கடமையைக் கருத்துடன் ஆற்றி மதிப்புப் பெற்றவர் அமரர் கோபாலரத்தினம். இவர் இலங்கை நிர்வாக சேவைக் கோர் முத்திரை.

முன்னாள் தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபரும் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சின் செயலாளருமான திரு. கி. கோபாலரத்தினத்தின் இறுதிச் சடங்கில் இரங்கல் உரையாற்றும் பொழுது யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

புலவர் எம். எஸ். தயாளனின் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் திட்டமிடல் அதிகாரி திரு மாணிக்கவாசகர், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். எம். மூர்த்தி ஆகியோருடன் இன்னும்பலர் உரையாற்றினர். [ச]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் புடவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

28 - 05 1989 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## பத்திரிகையாளர் பதவிகள்

தினசரி பத்திரிகைகளில் பணிபுரிந்த அனுபவமும் இறமையும் உடைய உதவி ஆசிரியர்கள், அலுவலகச் செய்தியாளர்கள் தேவை.

மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் உடையவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் நிரம்பிய தேர்ச்சி உடையவர்களும், தொழிலில் ஆர்வத்துடன் சேர்ந்து உழைக்கக்கூடிய தகுதி உடையவர்களும் விரும்பத் தக்கது.

முன்னர் பணிபுரிந்த நிறுவனங்களில் பெற்ற அத்தாட்சிப் பத்திரங்களுடனும், ஆற்றிய பணிகளின் விவரங்களுடனும்—

முழுச் சுய விவரங்களுடனும், நற்சான்று பகரக் கூடிய உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப் பத்திரங்களுடனும் —

2- 6- 1989 வெள்ளிக்கிழமைக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும்:

ஆசிரியர்,
நியூ உதயன் பப்ளிகேஷன்,
(பிறைவேட்) லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஷப்ரு கிண்ண கிரிக்கெட்; இன்று அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 28

'ஷப்ரு' வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

காலை 8. 30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ்'பி' அணியை எதிர்த்து ஷப்ரு விளையாட்டுக்கழக அணியும் —

பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் 'ஏ' அணியும் மோதும்]

## இறைச்சிக் கடைகள் திறக்கப்பட்டன

அனுமதி பெற்ற இறைச்சிக் கடைகள் நேற்றுத் திறக்கப்பட்டன.

கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாகப் பூட்டிக் கிடந்த கடைகளைத் திறப்பதற்கு யாழ். மாவட்ட பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலால கடந்த 24 ஆம் திகதி அனுமதி வழங்கி இருந்தார்.

எனினும் மாட்டிறைச்சி வியாபாரிகள் சங்கம் நேற்று முன்தினம் எடுத்த தீர்மானத்தின் படியே யாழ். மாவட்டம் அடங்கிலும் அனுமதி பெற்ற இறைச்சிக் கடைகள் நேற்றுத் திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-51)

## தமிழ்த் தினம்

யாழ்ப்பாணம், மே 28

யாழ் மத்திய கல்லூரியில் நாளை 29 ஆம் திகதி தமிழ்த் தின விழா கல்லூரி அதிபர் வே. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மொழியியற் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் கலாநிதி நுஹ்மானும், இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் திருமதி செல்வநாயகமும் இவ் விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவார்கள். (க)

## அமெ. தூதுவர் இலங்கை வாசியாவார்

கொழும்பு, மே 28

அமெரிக்கத் தூதர் ஜேம்ஸ் டபிள்யு ஸ்பெயின் இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தமது பணி முடிந்ததும் இலங்கையைத் தனது நிரந்தர வசிப்பிடமாகக் கொள்ளவிருக்கின்றார்.

அமெரிக்காவில் தமக்கு சொந்த வீடு இல்லை என்றும், இலங்கை தம்முடைய சொந்த ஊராகியுள்ளது எனவும் பத்திரிகையாளர் ஒருவரிடம் அவர் கூறினார். (க)

## அரசின்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட இடைவெளியின் பின்னரே அவர்கள் திரும்புவார்கள்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் தமது பாரியார் சகிதம் லண்டன் சென்று, இரண்டாம் கட்டப் பேச்சுக்காக கொழும்பு வருவார் என்றும் அறிய வந்துள்ளது. (அ-1)

## ஒழுக்கம் நிறைந்த---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பெரும் தியாகங்களைச் செய்துள்ளனர். இதனை மறக்காமல் குடிமக்கள் தொண்டர் படையினர் தமது கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்த குடிமக்கள் தொண்டர் படையில் சேரலாம். சேரவும் முன்வந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் துன்பங்களை, சிரமங்களை ஏற்று பயிற்சியை நன்கு நிறைவேற்றி உள்ளீர்கள். இதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்.

நாகரிகமான - ஒழுக்கமான -குடியியல் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதுஉங்கள்கடமை.

இது சாதாரண கடமை அல்ல. உங்களுக்கு பயிற்சி அளித்திருக்கும் இந்திய இராணுவத்தினர் இதனை உங்களுக்கு விளக்கி இருப்பார்கள்.

சீரற்ற சமுதாய நிலையை மாற்றி குடியியல் சமுதாயத்தை - ஒழுங்கு முறை சமுதாயத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்.

கண்ணியமானவர்கள். கட்டுப்பாட்டாளர்கள் என்ற பெயரை நீங்கள் நிலை நாட்ட வேண்டும். உங்கள் கடமைகள் வரலாறு முழுவதும் மக்களால் மறக்க முடியாதவைகளாக இருக்கும்.

மக்களை நேசியுங்கள். அப்பொழுது மக்களும் உங்களை நேசிப்பார்கள். மக்களை மிரட்டுவோரிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது உங்கள் கடமை

இப்படி முதலமைச்சர் தெரிவித்தார்.

குடிமக்கள் தொண்டர்படையின் கொமாண்டர் திரு. ஈ. ஆனந்தராஜா மற்றும் அமைதிப்படையின் உயர் அதிகாரிகள் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இதேசமயம் நேற்றுக்காலை யாழ் நகரை அண்டிய பகுதிகள் சிலவற்றில் மக்கள் கூட்டமாக வந்த வாகனங்கள் யாழ் நகரை நோக்கி படையினரால் திருப்பி விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இன்றைய உதைபந்தாட்டம்

''தாய ஒளி'' வெற்றிக்கிண்ணத்திற்கான 11 - பேர் கொண்ட 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று பிற்பகல் 3. மணிக்கு பி. பிரிவில் சென்ரேக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழகமும், மாலை 4-15 மணிக்கு ஏ. பிரிவு முஸ்லிம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஒ-51)

## தடைப்பட்ட---

டிருந்தன.

அப்போது மைதானத்திற்கு அருகே சில வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து அப்பகுதிக்கு வந்த படையினர் மைதானத்தை அண்டிய பகுதிகளில் தேடுதல் நடத்தினர்.

## அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்பச் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பத்திரிகைகளில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண்கள், பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நாளை திங்கட்கிழமை காலை விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிரைவேட்)லிமிட்டெட்,
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## எமது புதிய வெளியீடு

பிரபு - ரேகா - கௌதமி நடித்த

★ பிள்ளைக்காக ★

(பிரமிட் ஒறிஜினல்)

**வீடியோ விமல்**
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி [மேல்மாடி]
யாழ்ப்பாணம். (C/2667)

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்!

மகளிர்க்கான விசேட
✶ தையல் கலை வகுப்புக்கள்
✶ ஆங்கிலம் [சகலதரத்தினர்க்கும்] ஏற்ற வகுப்புக்கள்

அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படுகின்றன.

GROUP

பதிவுகட்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
(BRANCH)
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
C/2757

## காணவில்லை

97 ஸ்ரீ 4152 C D 200 மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் 26-05-89 வட்டுக்கோட்டைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிட்டது, கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

சன்மானம் வழங்கப்படும்.


808

## வாகனப் பதிவுப் புத்தகம்

குருநகர் மத்தியகிழக்கு வீதி, மவுண் கார்மல்வீதி, யாழ்-பிரதான வீதி, 2ஆம் குறுக்குவீதி, ஆஸ்பத்திரி வீதி, முத்தமிழ் வீதி, யாழ்-பண்ணைக்கு உட்பட்ட இடத்தில் எனது 42ஸ்ரீ 0074 இலக்க வாகனத்தின் பதிவுப் புத்தகம் 27-05-89 காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைக்கும்படி விநயமாகக் கேட்டுக் கொள்கிறேன். ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ம. இம்மனுவல்
14, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்,
(C/2666) யாழ்ப்பாணம்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
**இன்பநாதன் சின்னத்தம்பி**
(ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும்,
திரு இருதயக் கல்லூரி சிரேஷ்ட மாணவர் தலைவனும்)

மலர்வு: 4- 9 - 1966
உதிர்வு: 14- 4- 1989

சித்திரை பூத்தது சிந்தனை விரிந்தது
திக்கெல்லாம் மகிழ்ச்சியின் ஆரவாரம்
இன்ப வாசத்து இயற்கையாய் அமைந்த
இன்ப நாதம் இம்மென மறைந்தது
பாழும் எமன் வாளாய் வந்துபறிக்க
நாளும்பொழுதும் நைந்துநைந் துருகுகின்றோம்-உன்
கோல விழிப் பார்வையும் மோகனப் புன்னகையும்
எம்கண்ணில் என்றுமே தோன்றி நிற்கும்
உலகுள்ளவரை உனையொரு போதும் மறவோம்
உன்மத்தம் உற்றுநிற்கும் உற்றோர்
உடன்பிறந்தார் பெற்றோர் சுற்றம் ஆய நாம்
ஆத்ம சாந்திக்காக அரனடி தொழுகின்றோம்
மீண்டும் வாராயோ! அன்பே!! வாராயோ!!!

இராசசிங்கம் சின்னத்தம்பி ஜே. பி
குடும்பத்தினர்.

இன்பவாசம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை. [11081]

## மரண அறிவித்தல்கள்

### திரு. முத்துக்குமாரு மகேந்திரன்

திரு. முத்துக்குமாரு(துரை) மகேந்திரன் 15-5-89 இல் நோர்வேயில் அகால மரணமானார். இவர் நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், நோர்வேயில் கடமையாற்றியவரும் ஆவர்.

இவர் முத்துக்குமாரு தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், கமலாதேவி மங்கையர் திலகம், காலம் சென்ற மங்களேஸ்வரி, மனோராணி, கிருபாகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீ யோகராஜா, தெய்வேந்திரம், காலம்சென்ற இரத்தின ஸ்ரீ, ரவீந்திர குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயாபரன், தயாளினி, கமலதாஸ், தர்சனு, ஜெயசுதன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-5-89 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. முத்துக்குமாரு (துரை)

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. [11080]

### திரு. சரவணமுத்து இராசரெட்ணம்

ஓய்வுபெற்ற யாழ்ப்பாண பிரதம தபாற்கந்தோர் (Mail Officer) சரவணமுத்து இராசரெட்ணம் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், செல்வராசா (மின் அத்தியட்சகர், பிரதேசசபை, பளை), திலகராசா (மின்சாரசபை, சுன்னாகம்), சற்குணராசா (மின்சார ஒப்பந்தகாரர்], சிறீஸ்கந்தராசா (பிரான்ஸ்), தமயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதிதேவி, (ஆராய்ச்சி உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி நிலையம், கிளிநொச்சி), ஞானேஸ்வரி, லீலாவதி, விமலநாதன் (இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், K. K. S.) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரவணமுத்து செல்லம்மாவின் அன்பு இளைய சகோதரரும், புவனகாந்தன், புவனராசன், மதனரஞ்சன், சிவகங்கா, சிவராஜீவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செல்வராசா (மகன்)

5, கற்பகவிநாயகர் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். (810)

### Dr. திருமதி தேவிகாராணி லட்சுமணன்

Dr. திருமதி தேவிகாராணி லட்சுமணன் மலேசியாவில் 26-05-89 அன்று இறைவன் அடி சேர்ந்தார்.

அன்னார் திரு. K. லட்சுமணன் [பொறியியலாளர், மலேசியா] அவர்களின் அன்பு மனைவியும், செல்வி. சாந்தகல்யாணியின் அன்புத் தாயும், திரு. கு. தியாகராஜா [இளைப்பாறிய ஆசிரியர் திருநெல்வேலி], காலம் சென்ற திருமதி செம்பொற்சோதி தியாகராஜா அவர்களின் அன்பு மகளும், திரு. T. புவனசுந்தரராஜா (ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி], திருமதி சண்முகாராணி பாலசுப்பிரமணியம்[லண்டன்], செல்வி. T. அம்பிகாராணி, திருமதி மகாராணி நாகேந்திரம் [மலேசியா], திரு. T. நந்தகுமார் [பொறியியலாளர் லண்டன்], திருமதி சிவரூபராணி திரு. T ராஜரட்ணம் [லண்டன்], ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் மலேசியாவில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டப்படுகின்றனர்.

இராமகிருஷ்ணாலயம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (11086)

தகவல்:
T. புவனசுந்தரராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 28—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது